**செய்தி வெளியீடு எண்:521** **நாள் : 15.10.2014**

அரசின் திட்டங்கள் மக்களை முழுமையாகச் சென்றடைய
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் முனைப்புடன் செயல்பட வேண்டும்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டத்தில்
மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்
திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் பேச்சு

---

அரசின் அனைத்துத் திட்டங்களும் மக்களை முழுமையாகச் சென்றடைய செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் முனைப்புடன் செயலாற்ற வேண்டும் என மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் பேசினார்கள்.

மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் இன்று (15.10.2014) காலையில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரிய கூட்ட அரங்கில் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்திற்கு மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் தலைமை வகித்து பேசும்போது கூறியதாவது:-

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழை, எளிய மக்கள் நலனுக்காக எண்ணற்றத் திட்டங்களை உருவாக்கி, செயல்படுத்தியுள்ளார்கள். இத்திட்டங்களையும், திட்டப் பயன்களையும், சிந்தாமல் சிதறாமல் மக்களுக்கு கொண்டு சேர்க்கின்ற அளப்பரிய விளம்பரப் பணிகளை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் திறம்பட மேற்கொள்ள வேண்டும்.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி என்பது, பிறத் துறைகளின் பணிபோல் அல்ல. மக்களுக்கு சேவையாற்றுகின்ற, தியாக மனப்பான்மையுடன் செயல்படுகின்ற உன்னதப் பணியாகும். அரசின் திட்டங்களை அறிவதற்கும், தெரிவதற்கும், அதைப் பெற்று பயன்பெறுவதற்கும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களை நாடி வருகின்ற மக்களுக்கு நல்ல முறையில் வழிகாட்டி,

தகுதியிருப்பின் அப்பயன்கள் அவர்களுக்குக் கிடைக்க சிறந்த முறையில் உதவிட வேண்டும்.

அரசிற்கும், மக்களுக்கும் ஒரு இணைப்புப் பாலமாக செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும். ஒரு அரசிற்கு நல்ல பெயர் கிடைப்பது என்பது செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஆற்றுகின்ற பணிகளைப் பொறுத்துத்தான் அமைகிறது. இதனை மனதிற்கொண்டு செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் தனிக்கவனத்துடன் பணியாற்ற வேண்டும். பத்திரிகை அலுவலகங்களிலும், செய்தியாளர்களுடனும் தொடர்ந்து நல்லுறவைப் பேணி பாதுகாத்து வர வேண்டும். செய்தி வெளியீடுகளை நிகழ்ச்சிகள், விழாக்கள் முடிந்தவுடன், உடனுக்குடன் தயார் செய்து அனுப்ப வேண்டும். வீண் காலதாமதங்கள் ஏற்படக்கூடாது. அரசின் சாதனைகளையும், பயனாளிகளின் கருத்துகளையும் வெற்றிக் கதைகளாக எழுதி, நாளிதழ்களில் வெளியிடச் செய்திட வேண்டும்.

மாவட்டங்களில் நடைபெறும் அரசு விழாக்கள், முக்கிய திருவிழாக்கள், மக்கள் அதிகமாக கூடும் நிகழ்ச்சிகளின்போது அரசின் சாதனைகளையும், திட்டங்களையும் விளக்கி புகைப்படக் கண்காட்சிகளை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் நடத்திட வேண்டும்.

மாவட்டங்களில் உள்ள நினைவகங்களை நல்ல முறையில் பராமரித்து வர, உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நினைவகங்களுக்கு செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் அவ்வப்போது நேரடியாகச் சென்று ஆய்வு செய்து வரவேண்டும். குறைகள் காணப்பட்டால், அதை சரிசெய்ய உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

அரசின் சாதனை விளக்க வீடியோ படக்காட்சிகளை கிராமங்களில் தவறாமல் காண்பிக்க வேண்டும். மேலும், திரையரங்குகளில் அரசின் செய்திப் படங்கள் முறையாக காண்பிக்கப்படுகிறதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். தவறும் திரையரங்குகள் மீது துறை ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

அரசின் திட்டங்கள், சாதனைகள் மற்றும் மாவட்ட நிர்வாக முக்கிய செய்திகளை அரசு கேபிள் டிவியின் மூலம் ஒளிபரப்பப்படும் உள்ளூர் தொலைக்காட்சிகளில் விளம்பரப்படுத்திட வேண்டும்.

புகார்களுக்கு இடமின்றி செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும். பணிகள் திறம்பட அமைய, ஒருவருக்கொருவர் கலந்தாலோசித்து, பணிகளை சிறப்புற செய்திட வேண்டும்.

ஏழை, எளிய மக்களின் நலன் கருதி எண்ணற்ற திட்டங்களைத் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு, மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ள அம்மா உணவகம், அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மா மருந்தகம் போன்ற திட்டங்களை சிறந்த முறையில் விளம்பரப்படுத்தி, மக்கள் பயன்பெறச் செய்ய வேண்டும்.

அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் வைக்கப்பட்டுள்ள எல்.இ.டி (LED) தொலைக்காட்சி மூலம் காண்பிக்கப்படும் அரசின் சாதனைகள், திட்டங்கள் குறித்த படங்கள் முறையாக எவ்வித தடங்கலின்றி காண்பிக்கப்பப்பட்டு வருகிறதா என்பதை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் நாள்தோறும் கண்காணிக்க வேண்டும்.

இவ்வாறு மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் பேசினார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் ஜுன் 2014 முதல் ஆகஸ்டு 2014 வரையிலான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆய்வுக் கூட்டத்தில் செய்தி வெளியீடுகளின் எண்ணிக்கை, செய்தியாளர் சுற்றுப்பயணம், பத்திரிகையாளர் நலன், பத்திரிகையாளர் ஓய்வூதியம், வீடியோ படக்காட்சி, கேபிள் டிவி, திரையரங்க ஆய்வு, தமிழரசு சந்தா, வெற்றிக் கதைகள், சிறு புகைப்படக் கண்காட்சிகள், பல்துறை பணி விளக்க முகாம்கள், நினைவங்கள், காலிப் பணியிடங்கள், துறை தணிக்கை, மாநில கணக்காயர் தணிக்கை, நீதிமன்ற வழக்குகள், நிலுவையில் உள்ள கோப்புகள், வாகனங்கள் குறித்து மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் மூ. இராசாராம், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார்கள். செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார்கள். கூட்டத்தில் கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு. தங்கப் புகழேந்தி, கூடுதல் இயக்குநர் (செய்தி) திரு. எஸ்.பி. எழிலழகன், இணை இயக்குநர்கள் திரு. கு. தாணப்பா, திருமதி டி.ஆர். ஜெயஸ்ரீ,

திரு. உல. ரவீந்திரன், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், பிரிவு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**